*கவனிக்க.- 2018.09.21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2091 - 2018 සැප්තැම්බර් මස 28 වැනි සිකුරාදා - 2018.09.28

*2091 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 1480 | ஆதன விற்பனைகள் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - | | |
| பதவிகள் - வெற்றிடம் | - | | |


**கவனிக்க.-** (i) பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் 2018, செத்தெம்பர் 14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) ஒதுக்கீடு சட்ட மூலம் 2018, செத்தெம்பர் 21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2018, ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1479 - B81454 - 5,403 (2018/9)

# மற்றைய நியமனங்களும் பிறவும்

## வடமேல் மாகாண மாகாண சபை

வடமேல் மாகாண மாகாண சபையில் 1995 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க மாகாண கூட்டுறவுசபை ஆணைக்குழு சாசனத்தின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்

வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தக, காணி, மின்சக்தி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார, கலாசார மற்றும் கலை நடவடிக்கை மற்றும் தகவல் தொழில்நுட்ப மாகாண அமைச்சர் ராமநாயக்க ராஜபக்ஷ முதியன்சேலாகே பியசிறி ராமநாயக்க ஆகிய நான், வடமேல் மாகாணத்தின் 1995 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க மாகாண கூட்டுறவு சேவை ஆணைக்குழு சாசனத்தின் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அமைக்கப்பட்ட வடமேல் மாகாண கூட்டுறவு சேவை ஆணைக்குழுவிற்கு உரிய சாசனத்தின் 05 (01) ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி கீழ்க் காணும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதை இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.

2018.08.24 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமான பத்திரிகையில் IV (அ) பகுதியில் மாகாணசபை - மற்றைய நியமனங்களும் பிறவும் எனும் தலைப்பின் கீழ் சிங்கள மொழி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள“2018.10.05 ஆந் திகதி முதல் 2021.09.30 ஆந் திகதி வரை” என்பது “2018.10.01 ஆந் திகதி முதல் 2021.09.30 ஆந் திகதி வரை” என மாற்றம் செய்யப்பட வேண்டியுள்ளது எனவும்.

2018.08.17 ஆந் திகதி வர்த்தமானப் பத்திரிகையில் IV (அ) பகுதியில் மாகாண சபை அறிவித்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ள வடமேல் மாகாண சபை கூட்டுறவு சேவை ஆணைக்குழுவின் அங்கத்தவராக தெரிவு செய்யப்பட்ட திரு. சரித் தனுக்ஷ்க வீரகோன் அவர்களின் நியமனம் இடை நிறுத்தப்பட்டுள்ளது எனவும் பதிலாக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் உடையவர் 2018.10.01 ஆந் திகதியில் இருந்து 2021.09.30 ஆந் திகதி வரையான காலப்பகுதி வரை வடமேல் மாகாண கூட்டுறவு சேவை ஆணைக்குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

| | பெயர் | முகவரி |
|---|---|---|
| 01. | திரு. விஜேசிங்க ஹெட்டி ஆரச்சி முதியன்சேலாகே யசஸ் அனுபம விஜேசிங்க | இல. 62, பன்னல வீதி, குளியாப்பிட்டிய. |

ராமநாயக்க ராஜபக்ஷ முதியன்சேலாகே பியசிறி ராமநாயக,
கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தக, காணி,
மின் சக்தி விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார,
கலாசார மற்றும் கலை நடவடிக்கை மற்றும் தகவல்
தொழில்நுட்ப மாகாண அமைச்சர் (வடமேல் மாகாணம்).

2018, செத்தெம்பர் 11.

9-898